ஓம் சரவணஜோதியே நமோ நம

# ஆறுமுக அரங்கமகானின் குருவார அருளாசி நூல்

09.01.2025

1. சோதியாய் ஆட்கொண்ட சுப்பனே போற்றி
சுத்தநெறி காட்டிய அப்பனே போற்றி
சோதியாய் கலந்து சூட்சும ரூபில்
செப்பிடுவேன் என் மக்கட்கு அருளாசி

2. அருளாசி குரோதி சிலை திங்களில்
அருளுவேன் சதுர்வார குருவார ஆசி
வரமென என் மக்களை நோக்கி
வழங்குவேன் ஞான விளக்கமாக

3. ஆகவே அரங்கன் என்னை குருவாக
அடைந்தும் தருமநெறி வழியில்
மிகைபட வந்தும் கலியினிலே
முன்னேற்றம் ஏதும் காணவில்லை என

4. என வருந்தும் என் மக்களே
எல்லாம் அரங்கன் என்னால்
உணரப்பட்டு சடுதி மாற்றம்
உங்களுக்கு நல்லதாக நடக்க நேரும்

5. நேருமையான வழிமுறைகளை
நிலவுலகம் எங்கும் கொண்டு செல்லும்
பெருமைமிக்க என் மக்களே
பிள்ளைகளே முன்னூழ் தாக்கமே

6. தாக்கமே தடையாக வர
தக்கபடி குருவரங்கன் யானும்
தாக்கா வண்ணம் அகற்றியே
தரணியில் உங்களை மீட்பேன்

7. மீட்பேன் உங்களை காக்கும்
மேலான குருவாக இறங்கி
ஆட்கொண்டே யானே உலகில்
அனைத்துமாகியே காப்பேன்

8. காப்பேன் கடைத்தேற்றம் பெற
கண்கண்ட குலதெய்வமாக
ஒப்புகொண்டு உங்களுடனேயே
உடனிருப்பேன் கடைகாலமுமே

9. கடைநாளும் காட்சியும் ஆசியும்
கண்டுமே பிறவிப் பயனுறவே
தடையற ஓங்கார குடில் தனில்
தானாக சரணாகதி கொண்டு

10. கொண்டுமே அன்னமிட உதவி
குருவரங்கன் எனை ஏற்று
தொண்டனாகிச் சரணாகதி
தெரிவிப்பேன் வாழ்நாளும் தனை

11. தன்னையே தந்தேன் என
தவசியே என பூசை தொடர
அன்னவர்கள் எல்லோரும் கலியில்
ஆவரப்பா ஞானிகளாகவே ஆறுமுக அரங்கனென்
குருவார அருளாசி முற்றே.

—சுபம்—

ஓம் முருகப்பெருமான் திருவடிகள் போற்றி போற்றி